Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 21 | ஏப்ரல் 2016 | கானம் : 9



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar



ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-


மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 21 | ஏப்ரல் 2016 | கானம் : 9

Delivered by India Post

www.indiapost.gov.in







ப்ரேமிக வித்யா கேந்திரா - குர்காள் - ஆறாம் ஆண்டு பூர்த்தி விழா
பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி மஹாராஜ் அவர்கள்
மார்ச் 11, 12, 13





சேங்கனூரில் புறப்பாடு மார்ச் 15



மார்ச் 12-20 ராமாயண நவாஹம்
ஹூஸ்டன் நாமத்வார் அமெரிக்கா - பூர்ணிமாஜி







மதுரபுரி ஆஸ்ரம வளாகம் மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - முரளிஜி மற்றும் ஸ்ரீ பம்மல் பாலாஜி - 6.3.2016




பெரியகுளத்தில் ஸ்ரீமத் ராமாயண நவாஹம் - முரளிஜி
மார்ச் 6 - 15







கன்யாகுமரி ஸ்ரீ ஜய ஹனுமான் சன்னதி
மஹாசிவராத்திரி - மார்ச் 7



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 ஏப்ரல் 2016 கானம்: 9

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-241 | 05 | திருக்காவளம்பாடி | 26 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 | வீடு தேடி வருவான் விட்டலன் | 28 |
| தியானம் | 10 | பாலகர்களுக்கு ஒரு கதை | 29 |
| நான் அறிந்த வரையில் வேதாந்தம் | 13 | சத்சங்க செய்திகள் | 31 |
| புதுவருஷ சுபசெய்தி | 15 | ப்ருந்தாவன கண்ணன் | 34 |
| ப்ரும்மாவின் சிறைவாசம் | 24 | மாலே மணிவண்ணா | 36 |


*சிரவணான்மனனாஞ்சைவ கீதிஸ்துத்யர்ச்சனாதிபி:*
*ஆராத்யம் சர்வதா ப்ரஹ்மபுருஷேன ஹிதைஷினா*

*தனக்கு ஹிதத்தை வேண்டுகிற மனிதனால், நாராயணன், கதாசிரவணத்தாலும், தியானத்தாலும், பாட்டாலும், ஸ்துதிகளாலும், அர்ச்சனைகளாலும் எப்பொழுதும் ஆராதிக்கப்பட வேண்டும்.*

*- நாரதர் புண்டரீகனுக்கு சொல்வது*
*(மஹாபாரதம் - அனுசாசன பர்வா - 186)*

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் - நளினகாந்தி தாளம்: ஆதி

என் நிலை சொல்லிடுவேன் கண்ணா
முன்னே வந்து அருள் செய்திடுவாய் (என் ..)

அங்கும் இங்கும் அலைவதில் ஆசையில்லை – ஆனால்
பிருந்தாவனம் வர ஆசை உண்டு (என் ..)

அதையும் இதையும் பார்க்க ஆசையில்லை – ஆனால்
உன்னை பார்க்க பாச ஆசை உண்டு (என் ..)

பேச்சும் பாட்டும் கேட்க ஆசையில்லை – ஆனால்
உன் பேச்சும் பாட்டும் கேட்க ஆசையுண்டு (என் ..)

அன்னம் பானத்தில் ஆசையில்லை – ஆனால்
உன் அன்ன பானத்தில் ஆசையுண்டு (என் ..)

உடலுக்கு உழைப்பதில் ஆசையில்லை – ஆனால்
உனக்கு உழைப்பதில் ஆசையுண்டு (என் ..)

கதை நாடகங்கள் படிப்பதில் ஆசையில்லை – ஆனால்
பாகவதம் கீதை படிப்பதில் ஆசையுண்டு (என் ..)

முன் அட்டை : ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீபூவராஹ ஸ்வாமி - (மார்ச் 18 சம்ப்ரோக்ஷண தினம்)

பின் அட்டை - மதுரபுரி ஆஸ்ரமம் ஏகாதசி மார்ச் 19



# மதுரமான
# மஹனீயர் - 241

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி, வேதபாடசாலைகள் மதுரபுரி ஆஸ்ரமம், ஹைதராபாத், ஸ்ரீரங்கம் மற்றும் வேதாரண்யத்திலும், அதுபோலவே திராவிட வேத வைணவ ஆகம பாடசாலை திருநாங்கூரிலும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்பது நாம் அறிந்ததே. வேதத்திற்கு பல பாடசாலைகள் உண்டு; வேதாந்தத்திற்கும் பாடசாலைகள் உண்டு; சாஸ்திரத்திற்கும் பாடசாலைகளும் கல்லூரிகளும் உண்டு. இதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் புராணங்களுக்கு அப்படி பாடசாலைகள் அநேகம் இருப்பதாக தெரியவில்லை.

நமது சனாதன தர்மத்தில், புராணங்கள் ஒரு முக்யமான பங்கு வகிக்கிறது என்று நம் குருநாதர் சொல்வார்கள். புராணங்கள்தான், நம் சனாதன தர்மத்திற்கு வேராக இருக்கக்கூடிய வேதங்கள் சொல்லும் உண்மைகளை, தத்துவங்களை, பூதக்கண்ணாடி கொண்டு பார்ப்பது போல் அழகாக எடுத்து காட்டுகின்றன என்பார்கள்.

இப்படிப்பட்ட புராணங்களை கற்று கொடுக்கும் பாடசாலையை நிறுவ வேண்டும் என திருவுள்ளம் கொண்ட குருநாதர் அவர்கள், வேதவியாச புராண பாடசாலையை 2014ஆம் ஆண்டு பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாகத்தில், குருபூர்ணிமா அன்று துவக்கி வைத்தார்கள். இதில் ப்ரும்மஸ்ரீ கார்த்திக் சாஸ்திரிகள் (வியாகரண சிரோண்மணி) ஆசிரியராக சேர்ந்தார். எட்டு வித்யார்த்திகள் புராணம் கற்பதற்காக வந்து சேர்ந்தனர்.

ஸ்ரீ ஸ்ரீ அண்ணா என்று ப்ரேமையுடன் அழைக்கப்படும் பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி மஹாராஜ் அவர்களின் கிரந்தங்களுக்காக என்றே பிரத்யேகமான ஒரு கேந்திரத்தை ஸ்ரீஸ்வாமிஜி டெல்லி குர்கானில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். 2010இல் துவக்கப்பட்ட இதில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தங்களே பகவானாக இருக்கிறது. இங்கு பிரதி வருடம் பூர்த்தி அன்று ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் விஜயம் செய்து, பிரவசனம் அருளுவார்கள். அதுபோல் இந்த


வருடம் மார்ச் **11,12,13** தேதிகளில் ஆறாம் வருட பூர்த்தியை ஒட்டி சத்சங்கம் நடைபெற்றது. அப்பொழுது ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களிடம், அவர் முன்பாக, வேதவியாச புராண பாடசாலை வித்யார்த்திகள் உபன்யாசம் செய்ய விண்ணப்பிக்கப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களும் சந்தோஷமாக அனுமதி தந்தருளினார்கள். அப்பொழுது வித்யார்த்திகள் நன்கு உபன்யாசம் செய்தனர். அதை கேட்டு ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் ஆனந்தித்தார்கள். முதலில் யஜுர் வேதம் பூரணமாக அத்யயனம் செய்த ப்ரும்மஸ்ரீ கபிலவாசுதேவன், ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தமான ருக்மிணி பரிணயத்திலிருந்து சில பகுதிகளை எடுத்து உபன்யாசம் செய்தார். ஸ்ரீசனத்குமார் ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தமான ராமகதாம்ருத சாரத்திலிருந்து எடுத்து உபன்யாசம் செய்தார். ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தமான ப்ருந்தாவன மஹாத்மியத்திலிருந்து, ஸ்ரீஹரி, கோவர்தன லீலை குறித்து, உபன்யாசம் செய்தார். சௌ.காயத்ரி ஜெயதேவ சரித்திரத்தையும், சௌ.பிரியங்கா மீராபாய் சரித்திரத்தையும், சௌ.ஸ்ரீகன்யா சிவகன்யா சகோதரிகள், ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தமான வைஷ்ணவ சம்ஹிதையிலிருந்தும் எடுத்து உபன்யாசம் செய்தனர். ப்ரும்மஸ்ரீ சபரி கனபாடிகள் நியாய சாஸ்திரத்தை அழகாக எடுத்து சொல்ல கூடிய, ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தமான நியாய நளினியிலிருந்து எடுத்து உபன்யாசம் செய்தார். ப்ரும்மஸ்ரீ கார்த்திக் சாஸ்திரிகள், ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் எழுதிய அலங்கார சாஸ்திரமான விருத்த சதகத்தை பற்றி உபன்யாசம் செய்தார். பின் ஸ்ரீராமானுஜம் ஸ்ரீதரியத்தை மையமாக வைத்து கொண்டு, ஜன்மாத்யஸ்ய யத: என்ற பாகவதத்தின் முதல் ஸ்லோகத்தை பற்றி உபன்யாசம் செய்தார். இதை எல்லாம் கேட்டு ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள், மிகவும் சந்தோஷித்து எல்லோரையும் அனுக்ரஹித்தார்கள். இப்படியாக ஆறாம் ஆண்டு விழா மிக நன்றாக பூர்த்தி ஆனது.

இந்த தமிழ் புத்தாண்டிலிருந்து, ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் ஜன்மஸ்தானமான சேங்கனூரில், ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தங்களுக்காக என்றே குருவருளுடன் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட உள்ளது. இதில் முதலில் பத்து வித்யார்த்திகள் சேர உள்ளனர். இதற்கு சுத்த ப்ரேமிக வித்யா கேந்திரம் என்று பெயர்.

ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் நம்முடைய ஸ்தாபனங்கள் மூலம், சில இடங்களில் நடந்து வரும் வேதபாடசாலைகள், ஆகம பாடசாலை, புராண பாடசாலை, நாமப்ரச்சாரம், திவ்ய தேச திருப்பணிகள், மேலும் பல கைங்கர்யங்களை பற்றி மிகவும் உயர்வாக பேசி, அந்தந்த கைங்கர்யங்கள் மேலும் வளர்ந்து நன்றாக நடக்க அனுக்ரஹம் செய்தார்கள்.

## *ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சிந்தனை மலர்கள்*

* *எந்தவொரு நிகழ்விலும் பேச்சிலும், 'நான், நான்' என்பதை விட்டு விட முயலவேண்டும். அதற்கு பதிலாக, ஒவ்வொரு நிகழ்விலும் பேச்சிலும், 'க்ருஷ்ணன் (அவன்) க்ருஷ்ணன் (அவன்)' என்பதையே நினைவில் கொண்டு வர முயலவேண்டும்.*
* *'ஜீவித்திருக்கையிலேயே முக்தி அடைந்து விட்டேன்' என்பதை உணர செய்யும் தத்துவம்தான், மெச்சும்படியாக இருக்கிறது.*
* *எந்தவொரு உணர்வும் காலம், இடம், வியக்தியை (தனி மனிதனை) ஒட்டியே இருக்கிறது.*
* *பக்தி மார்க்கத்தில் நடக்க, முதலில் ஒருவருக்கு விருப்பம் வர வேண்டும். அந்த விருப்பம் ஒருவரை பக்தி செய்வது எப்படி, என்பதை, புரிந்து கொள்ள வைக்க வேண்டும். இந்த அறிவு, பகவானை அடைவேன் என்ற திடமான உந்துதலில் கொண்டுவிட வேண்டும். அதுவே திட பக்தியை செய்ய காரணமாக ஆக வேண்டும். பிறகு அது பகவானை அடைய ஆழ்ந்த தாகமாக மாற வேண்டும். அந்த தாகமே, பக்தியின் பலனை அடைவிக்கிறது.*
* *நான் எனும் அகந்தை பிறந்தவுடன் அது முதலில், அடுத்தவர்களிடம் இருக்கும் தவறை கண்டுபிடிக்க ஆரம்பிக்கிறது. காரணம் என்னவெனில், அந்த 'நான்' எனும் அகந்தையே தவறுகள் பலவற்றை கொண்டதாக உள்ளதால், அதன் முதல் காரியமே இப்படி தவறாக இருக்கிறது.*



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி : ஞானி சர்வ வியாபியாக இருக்கின்றான் என்றுதானே சொல்கின்றீர்கள். அப்பொழுது செவ்வாய், புதன், சனி போன்ற கோள்களில் என்ன உள்ளது என்று ஒரு ஞானி சொல்லி விடலாமே? உயிரினம் உள்ளதா இல்லையா, நீர் உள்ளதா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்கு, பல கோடிகள் செலவழித்து கண்டுபிடிக்க வேண்டாமே?

பதில்: உங்களுடைய சரீரம் முழுவதும், 'நான்' என்ற உணர்வு பரவி உள்ளது இல்லையா? அதனால்தான், சரீரத்தில் கர்ம இந்திரியங்களின் செயல்களும், ஞான இந்திரியங்களின் செயல்களும் உங்களுடையது ஆகின்றது. அதே சமயத்தில் உங்கள் இதயத்தை, கல்லீரலை, நுரையீரலை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? அதில் ஏதாவது பழுது ஏற்பட்டால், பணம் செலவு செய்து **SCAN** செய்துதான் கண்டுபிடிக்க முடியுமே தவிர, 'நான்' என்ற உணர்வு வியாபித்துள்ளதால், மட்டும் தெரிந்து கொள்ள முடியும் என்பது அவசியமில்லை.

கேள்வி: நான், நீங்கள் சொல்லியபடியே, கிருஷ்ண பக்தி செய்து கொண்டு வருகின்றேன். அது மட்டுமே போதுமா? அல்லது சிவன், தேவி, கணபதி, முருகன் போன்ற தெய்வங்களையும் பக்தி செய்ய வேண்டுமா?

பதில்: நீங்கள் எந்த தெய்வத்தையாவது, ஒழுங்காக பக்தி செய்யுங்கள். உங்களுக்கு அதுவே போதுமானது.

கேள்வி: சத்குரு என்று அடைமொழி போட்டு கொள்வானேன்?

பதில்: வித்யையை சொல்லி தருபவர் வித்யாகுரு. மந்திரத்தை உபதேசிப்பவர் மந்திர குரு. சாஸ்திரத்தை உபதேசிப்பவர் சாஸ்திர குரு. 'ஸத்' ஆன ஆத்ம ஸ்வரூபத்தை உபதேசிப்பவர் சத்குரு ஆவார்.

கேள்வி : எவ்வளவோ கிருஷ்ண பக்தர்கள் இருக்க, கோபிகைகளை மட்டும் கிருஷ்ண பக்தர்களிடையே உயர்வாக எல்லோரும் கூறுவது சரியானது ஆகுமா?

பதில்: பயத்தினால், சித்தத்தை கிருஷ்ணனிடம் செலுத்தியவர்கள் உண்டு. அதுபோல் பிராண ஆபத்து, குடும்ப

துக்கம், விபத்து, மரணம், வெறுப்பு, முக்தி, சித்திகள் பாவத்தை போக்கி கொள்ளுதல் போன்ற பலன்களை பிரதானமாக கொண்டு, சித்தத்தை கிருஷ்ணனிடம் செலுத்தியவர்கள்தான் மற்றவர்கள் எல்லாம். கோபிகைகளின் மனது ஸ்ரீகிருஷ்ணனிடம் ஈடுபட்டதற்கு காரணம் என்ன தெரியுமா? ஸ்ரீகிருஷ்ணனை நினைத்தால், சுகமாக இருக்கின்றது என்பதற்காக, ஸ்ரீகிருஷ்ணனை நினைத்தார்கள். அவர்களை உயர்வாக சொல்வதில், மறுப்பிற்கே இடமில்லை.

கேள்வி: காமம், காஞ்சனம், கீர்த்தி இவைகளே சாதகனுக்கு பெரும் தடைகளாக ஏன் சொல்லப்பட்டுள்ளன?

பதில்: மோக்ஷம் என்பது என்ன? மனதில் எண்ணங்கள் அற்ற நிலையே மோக்ஷம். எண்ணங்கள் எதனால் கிளம்புகின்றன? வாசனையால்தான் எண்ணங்கள் கிளம்புகின்றன. வாசனைகளை எவை தூண்டுகின்றன? உணர்வுகள்தான் வாசனைகளை தூண்டுகின்றன. துக்கத்தால் பாதிக்கப்பட்டவனுக்கு, வெகு காலத்துக்கு அது சார்ந்த எண்ணங்களே பிரதானமாக வந்து கொண்டிருக்கும். மனது அதன் நிவர்த்தியையும் தேடும். பயந்தவனுக்கு, அது தொடர்பான எண்ணங்களே சங்கிலி தொடர் போல் வந்து கொண்டிருக்கும். மனதும், அதற்கான நிவர்த்தியை தேடும். நஷ்டம் அடைந்தவனுக்கு, அது தொடர்பான எண்ணங்களே வந்து கொண்டிருக்கும். மனதும் அதற்கான நிவர்த்தியை தேடும். அவமானப்பட்டவனுக்கு அது தொடர்பான எண்ணங்களே வந்து கொண்டிருக்கும். மனது அதற்கான நிவர்த்தியை தேடும். இப்படியேதான் வெறுப்பு, விரோதம் போன்றவைகளும். இவைகள் எல்லாம், குறுகிய அல்லது நீண்ட கால கட்டத்தில் மாறி விடும். ஆனால், காமத்தில் ஆசை வந்தவனுக்கு, அது தொடர்பான எண்ணங்களே அலை மேல் அலை போல் வந்து கொண்டிருக்கும். அதுபோல்தான், புகழில் ஆசை உடையவனுக்கும் பொருளில் ஆசை உடையவனுக்கும். இவர்கள் இவ்விஷயங்களில் எவ்வளவு அவமானப்பட்டாலும், துக்கப்பட்டாலும் நிவர்த்தியை தேட மாட்டார்கள். மாறாக, ஆசைகளை வளர்த்து கொள்ளவே பார்ப்பார்கள். ஆக, காமம் காஞ்சனம் கீர்த்தி, இது மூன்றையும் துறக்காத வரையில், எண்ணங்கள் ஓய்வது என்பது இல்லை. எண்ணங்கள் ஓயாத வரையில் முக்தி என்பதே இல்லை.

# *தியானம்*

*–ஸ்ரீஸ்வாமிஜி*

ஒருவனை பார்த்து, என்ன செய்ய போகிறாய் என்று கேட்பதாக வைத்து கொள்வோம். அவன், அதற்கு பதிலாக, நான் கிருஷ்ணனை தியானம் செய்ய போவதாக சொல்கிறான். நல்ல விஷயம்.

கிருஷ்ணனின் அழகிய உருவத்தை அவன் முன்னால் வைத்து கொண்டு, அதில் தன் கவனத்தை செலுத்துகிறான். சும்மா பார்த்து கொண்டே இருக்கிறான்; வேறொன்றும் அவனுக்கு தோன்றவும் இல்லை என்றால், அது வெறித்து பார்த்து கொண்டிருப்பது போன்றதொரு நிலைதானே! அவனுக்கு எதற்காக கிருஷ்ணனின் உருவத்தை பார்த்து கொண்டிருக்கிறோம் என்று தெரியவில்லை; அல்லது, அப்பொழுது அவன் செய்வதை தாண்டி, என்ன செய்ய வேண்டும் என அவனுக்கு தெரியவில்லை. இது நன்கு கவனித்தால் புரியக்கூடிய விஷயம்.

கோயிலுக்கு செல்லும் ஒருவருக்கு எந்தவொரு தேவையும் இல்லை எனில், அவர் கோயிலில் நடக்கும் விஷயங்களைத்தான் கவனித்து கொண்டிருப்பார். பல்லி ஓடுகிறது; குப்பை கிடக்கிறது; மனிதர்கள் வருகிறார்கள்; எழும் சப்தம் என மனம் செல்லும். ஸ்வாமியை பார்த்தாலும், மனம் ஸ்வாமியிடம் செல்லாது. அதாவது ஸ்வாமியுடன் மனதளவில் இவருக்கு எந்த தொடர்பும் இருக்காது.

ஆனால் ஒரு கஷ்டம் இருந்து, அதன் நிவர்த்திக்காக அவர் கோவிலுக்கு வருவாராயின், அவர் மனமெல்லாம் இப்பொழுது ஸ்வாமியிடம் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும். இப்பொழுது அவர் ஒரு தொடர்பில் இருக்கிறார். இப்படியே ஒரு யோகி, தனக்கு அஷ்டமாசித்திகளை தர வேண்டும் என பிரார்த்திக்கலாம். அல்லது ஒரு பக்தர், தனக்கு திவ்ய காட்சிகள் வேண்டும் என பிரார்த்திக்கலாம்.

ஒரு முமுக்ஷு, பிறவி வேண்டாம் என பிரார்த்திப்பார். அவருக்கு, உலகில் உள்ள கஷ்டங்களை பார்த்து, அதில் வெறுப்பு தட்டி, வைராக்யம் ஏற்பட்டு இருக்கும். வயதானால்

வியாதி வருகிறது, கஷ்டம் வருகிறது; விபத்து, கடத்தல், கொள்ளை போன்ற சம்பவங்கள் நடக்கின்றன. இதனால் கஷ்டம் நேரிடுகிறது. இதை எல்லாம் பார்த்து பார்த்து, மனதில் தீர்க்கமான வைராக்யம் உண்டாகி, ஸ்வாமியிடம், எனக்கு தயவு செய்து இந்த பிறவி தளையிலிருந்து விடுதலை கொடு, என்று பிரார்த்திப்பார். விடுதலை மட்டுமே, அவர் குறிக்கோளாக இருக்கும். "உலகில் ஏன் இப்படி நடக்கிறது? நீதானே உலகை படைத்தாய்" என்று அவர் ஸ்வாமியை கேட்க மாட்டார். ஏனெனில் அதை அவர் கேட்க முடியாது. அவர், பிறவி தளையில் இருந்து விடுவித்து கொள்ள பிரார்த்தனை செய்ய முடியும். அதைத்தான் அவர் செய்வார்.

இவை அனைத்திலும் ஸ்வாமியிடம் தொடர்பு இருக்கிறது. திவ்யமங்கள ரூபம் கொண்ட கிருஷ்ணனை பார்த்து கொண்டிருந்தாலே போதும்தானே? நிச்சயம் போதும்தான். ஆனால் அதற்கு கோபிகள் போன்ற ஹிருதயம் இருக்க வேண்டும். அவர்கள், எப்படி எல்லாம் கிருஷ்ணனை நினைத்து நினைத்து ஆனந்தப்படுகிறார்கள். அவனை ஆரத் தழுவிக்கொள்ள வேண்டும்; அவனை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம், அவனை காதலனாக பாவித்து மகிழ்கிறார்கள். ஒருகணமாவது, அதில் சலிப்போ சோம்பலோ வறட்டுத்தனமோ இருக்க, வாய்ப்பே இல்லை. ஒரு அருவி போல, அவர்கள் மனதில் அன்பு அலையானது ஓடி வந்து கொண்டிருக்கிறது. அப்படித்தான் யசோதையின் வாத்ஸல்ய பாவமானாலும், அர்ஜுனனின் சகா பாவமானாலும் அல்லது அனுமனின் தாஸ்ய பாவமானாலும், அவை அனைத்திலும் ஒரு அன்பு மயமான தொடர்பு பின்னப்பட்டு இருக்கிறது. அதனால், ஹனுமார் ராமரை பார்த்து கொண்டே இருக்க முடிகிறது. அது வெறித்து பார்ப்பதல்ல. அவருக்கு அதில் சலிப்பு என்பது இருக்கவே இருக்காது. வெறித்து பார்ப்பது, பார்ப்பவரை மனோபலம் இழக்க செய்யும்.

முற்றுமுணர்ந்த ஞானியிடமும், ஒரு சாந்த ரஸம் இருக்கிறது. எதையும் எதிர்பார்க்காத பக்தர்களை, ஞானிகளை பற்றிய விஷயம் வேறு. சம்சாரிகளின் நிலை என்பது வேறு. அவர்களிடம், ஸ்வாமியிடம் ஒரு பிரார்த்தனையும் செய்யாதே

என சொல்ல முடியாது. பேராசைப்படாமல், தேவைக்கு மேல் வசதி என ஆசைப்படாமல், எது அத்யாவசியமான தேவையோ, சௌகரியமோ அதை பிரார்த்தனை செய்யலாம். அதை பகவான் அருளுவான். ஒரு பெண்ணிற்கு காலாகாலத்தில் கல்யாணம் நடக்க பிரார்த்திப்பது, சம்பாதிக்க வேலை வேண்டும் என வேண்டுவது, கஷ்டம் விலக வேண்டும் என கேட்பது போன்றவை சரியே. ஆனால் சௌக்கியமாக இருக்கையில் மேலும் வசதி வேண்டும் என கேட்பது பேராசை.

எந்தவிதமான தேவையும் இல்லாமல், ஸ்வாமியை பார்க்க செல்லும் பெரும்பாலானவர்களுக்கு, மனதில் எந்த ஒரு பிரார்த்தனையும் இருக்காது. அது வறண்ட ஹிருதயம் போன்றது. அவன் ஸ்வாமியை வெகு நேரம் பார்ப்பது என்பது, ஒரு கறுப்பு புள்ளியை பார்த்து கொண்டிருப்பதை ஒத்ததுதானே? பக்திக்கு அன்பு தோய்ந்த பாவம்தானே அடிப்படை அவசியம்!

*ஒருவர் நம்மை மிகவும் அவமானப்படுத்துகின்றார். துன்பப்படுத்துகின்றார். பலவிதத்திலும் இன்னல் தருகின்றார் என்ற போதிலும், அவரிடமிருந்து அவ்வப்பொழுது சின்ன சுகங்கள் உண்டு என்று வைத்து கொள்வோம். மானம், ரோஷம் உள்ளவன் சின்ன சுகங்களை பொருட்படுத்தாமல் அந்த மனிதனை விட்டு விடுவான். இந்த உலக வாழ்க்கையில், நாம் எவ்வளவோ அவமானங்கள், துக்கங்கள், இன்னல்கள், இவைகளை பெறுகின்றோம். மான ரோஷம் இருந்தால், உலக வாழ்க்கையை வெறுத்து, ஸ்ரீகிருஷ்ண சரணங்களை பற்றி கொள்ள வேண்டும். அதை விட்டு எவ்வளவு துக்கம், அவமானம், இன்னல் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு, மீண்டும் மீண்டும் மீண்டும் சிற்றின்பங்களையே நாடுபவன், மானமும் ரோஷமும் இல்லாதவன்.*

*-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*

# நான் அறிந்த வரையில் வேதாந்தம்

- ஸ்ரீராமானுஜம்

என்னிடம் ஒரு நண்பர் ஒரு முக்கியமான விஷயத்தை கூறி, "இதை யாரிடமும் சொல்லவே கூடாது என்றார். அதோடு மட்டுமல்லாமல் யாரிடமும் சொல்ல மாட்டாயே! நீ சொல்ல மாட்டாய் என்று உன்னை நம்பித்தான் இதை உன்னிடம் சொல்லி உள்ளேன்" என்றார். அதை கேட்டவுடன் எனக்கு யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று ஒரு அவஸ்தை ஏற்பட்டது. விஷயத்தை சொன்னவன் வேறு யாரிடமும் சொல்லாதே சொல்லாதே என்று மீண்டும் மீண்டும் சொல்லும்பொழுது, யாரிடமாவது சொல்லியே ஆகவேண்டும் என்ற அவஸ்தை அதிகமாகவே செய்தது. யாரிடமாவது சொல்லிவிட வேண்டுமென்று ஒரு தவிப்பு. விஷயத்தை சொல்லி விடலாம் என்று முடிவு செய்து, ஒருவரை அணுகுவேன்; வாய் வரை வந்து விடும். பிறகு நண்பர், யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொன்னது நினைவிற்கு வரும். வேறு எதையோ பேசி, விஷயத்தை சொல்லாமல் சமாளித்து விடுவேன்.

இப்படியாக என் நிலை இருப்பதால், எனக்கு தூக்கமும் வரவில்லை. யோசித்து பார்த்தேன். அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது. இப்பொழுது என் நண்பன் சொன்ன அந்த விஷயம், உடலில் எந்த பாகத்தில் உள்ளது? நுரையீரலிலா, கணையத்திலா அல்லது குடலிலா என்று என்னையே கேள்வி கேட்டு கொண்டேன். அல்லது மூளையிலா? மனதிலா? எங்கே? அது ஒவ்வொரு முறையும் சொல்ல வேண்டுமென்று அவஸ்தை ஏற்படும்போது ததும்புகின்றதே? எங்கே ததும்புகின்றது? உடலில் அதற்கான இடம் எது? எப்படி அது ததும்புவது போல் ஒரு உணர்வு ஏற்படுகின்றது என்று தத்தளித்து கொண்டே படுத்து கொண்டிருந்தேன். உறக்கம் வந்தது. உறக்கத்தில் ஒரு கனவு; அழகான காடு. காட்டில் ஒரு பரண் சாலை; பரண் சாலை சுற்றி மான்கள் விளையாடி கொண்டிருந்தன. தர்ப்பை செடிகள் நிறைய இருந்தன. அங்கே ஒரு ரிஷி அமர்ந்திருந்தார்.

அந்த ரிஷியின் முன், சில சாதகர்கள் அமர்ந்திருந்தார்கள். அந்த ரிஷி ஜடை, தாடியுடன் காணப்பட்டார்.

அவர் பத்மாசனத்தில் ஆலமரத்தடியில் அமர்ந்திருந்தார். ஒளி வீசும் கண்கள். அவர் தன் சீடர்களை பார்த்து, இவ்வாறு சொன்னார், "மனித உடல், எலும்பு, சதை, ரத்தம், அணுக்கள் போன்றவைகளால் ஆனது. அந்த உடலில் பஞ்ச ப்ராணன் வேலை செய்ய ஆரம்பிக்கும்பொழுது, கர்ம இந்திரியங்கள் வேலை செய்ய ஆரம்பிப்பதால், கை, கால், வயிறு போன்றவைகள் இயங்குகின்றன. அடுத்தடுத்ததாக ஞானேந்திரியங்கள் வேலை செய்ய ஆரம்பிக்கின்றன. மின்னலும் இடியும் போல், சம காலத்தில், மனதும் அறிவும் தோன்றுகின்றன".

"உள்ளிருந்து, நான் என்ற உணர்வு, flash மாதிரி அடுத்தடுத்து வந்து கொண்டே இருப்பதால், முதலில் அந்த உணர்வு சரீரத்தை பற்றி கொண்டது. பிறகு பிராணன் மனதை பற்றி கொண்டது. பிராணனை துணை கொண்டு பஞ்சபூதங்களான இந்த பிரபஞ்சத்துடன் தொடர்பை ஏற்படுத்தி கொண்டது. அப்பொழுது, 'நான்' என்ற உணர்வு உதிக்கின்ற இடத்தை உணர வேண்டும்; உணர்ந்த இடத்திலேயே அதை உறுதியாக நிறுத்த வேண்டும். அப்படி தொடர்ந்து நிறுத்துவதால் அதன் வலுவானது குறையும். அப்பொழுதும் தீரனாக ஓய்வில்லாமல், அதை அதே இடத்திலே ஒடுக்க, அங்கு அடக்க முடியாத ஆனந்தமும், அகண்டாகார தத்துவமும், தானே தானே தோன்றும்".

*ஒரு மனிதன் தன் வாழ்நாளில் கடினமாக உழைத்து பல இன்னல்களை சமாளித்து பல யுக்திகளை செய்து சம்பாதித்த செல்வம், பொருள், பதவி, புகழ் எதுவும் இறந்த பிறகு அவனுடன் செல்வதில்லை. ஆனால் அவன் முயற்சி இல்லாமல் சேர்த்து கொண்ட வாசனைகளே அவனுடன் செல்கின்றன.*

*-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*

# *புதிய வருஷ சுப செய்தி*

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை முதல் பங்குனி முடிய வருடம் என்ற கணக்குக்குள்ளாகிறது. சித்திரை மாதம் முதல் தேதியன்று சூரிய பகவான் மேஷ ராசியில் பிரவேசிக்கின்றார். அன்றே வசந்த ருதுவின் ஆரம்பம். வருஷத்தை ஆறு பிரிவுகளாக பிரித்த பெரியோர்கள் வசந்த ருதுவை வருஷத்திற்கு முதன்மையாயிட்ட காரணம்தான் என்ன? வாசனை வீசும் மலர்களினுடையவும் இளந்தளிர்களினுடையவும் மணமும் குளிர்ந்த தென்றலும், தானியங்கள் நிரம்பிய கிரஹமும், மங்கள காரியங்களை தெரிவிக்கும் நிகழ்ச்சிகளும் கொண்ட ஓர் உத்தமமான காலத்தை, வருஷத்துக்கு முதலாக கலந்த பெரியோர்களின் கூர்ந்த மதியை என்னென்பது?

காலமென்பது ஆதி, அந்தம் இல்லாதது. ஆனால் சூரிய சந்திரர்களுடைய போக்கை ஆதாரமாக வைத்து கொண்டு வருஷம், மாதம் முதலிய பிரிவுகள் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த பிரிவுகள் எதற்கு? லௌகீக வைதீக வியாபாரங்களை நிறைவேற்றுவதற்காக. லௌகீகமான கிருஷி, வியாபாரம் முதலியவைகள் இந்த மாதத்தில், இந்த திதி நக்ஷத்திரங்களில் ஆரம்பித்தால் நன்றாய் பலனை கொடுக்கும் என்ற விசேஷங்கள் தெரிந்தவையே. சில செடிகள், சில ருதுக்களிலேயே பயனை கொடுக்கும். அதை நன்கு அறிந்து அக்காரியங்களை ஆரம்பித்தால், விசேஷ லாபமுண்டாகும். யாத்திரை, கொடுக்கல், வாங்கல் முதலியவைகள், ப்ரசஸ்தமான திதி வாரங்களில் ஆரம்பித்தால், நற்பயனை கொடுக்கும். வைதீக கர்மாக்களுக்கோ, காலம் என்பது இன்றியமையாதது. யாகங்களும் மற்ற புஷ்டி கர்மங்களும், குறிப்பிட்ட திதி நக்ஷத்திரங்களிலேயே, செய்யப்பட வேண்டும். தர்சமென்ற யாகத்தை, அமாவாஸ்யை என்று நினைத்து,

ஒருவன் சதுர்தசியில் செய்ய ஆரம்பித்து, விடியற்காலத்தில் சந்திரனை கண்டு விட்டால், அந்த ஹவிஸை, அந்த தேவதைகளுக்கு கொடுக்காமல் வேறு தேவதைகளுக்கு கொடுக்க வேண்டுமென்று வேதத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

இவ்வாறு சூக்ஷ்ம காலங்களை அறியவே, ஜோதிஷம் என்ற அங்கம் ஆறு வேதங்களில் முக்யமானதாக கருதப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு வைதீக கர்மங்களையும் ஆரம்பிக்குமுன், சங்கல்பம் செய்து கொண்டே ஆரம்பிக்க வேண்டும். அந்த சங்கல்பத்தில், காலத்தை அவசியம் சொல்லி கொள்ள வேண்டும். ஆதியில்லாத காலத்தை, எப்படி குறிப்பிட முடியும்? ப்ரும்மாவின் வயதை அடிப்படையாக கொண்டு, திதி வரையில் சொல்லிக்கொள்கிறோம். இப்படி சொல்லிக்கொள்வதால், மஹா காலத்தில் நம்முடைய ஜீவிதம் எவ்வளவு சிறியதென்று புலப்பட்டு, வைராக்யத்தையும் கொடுக்கும்.

காலப்பிரிவுகளில் சம்வத்ஸரம் என்பது சௌரம், சாந்திரம், ஸாவகம் என்று மூவகைப்பட்டது. தமிழர்களாகிய நாம் சௌரமானத்தை கொண்டு, பல கர்மாக்களை அனுஷ்டிப்பவர்கள். தமிழர்களல்லாதவர்களும், தமிழர்களில் சிலரும், சாந்திரமானத்தை ஆதாரமாக கொண்டுள்ளார்கள். நாமும் விருதாதி சில காரியங்களை, சாந்திரமானத்தை ஒட்டி நடத்தி வருகிறோம் என்றாலும், வருஷப்பிறப்பு முதலானவைகளை சௌரமான ரீதியிலேயே கொண்டாடுகிறோம்.

வருஷப்பிறப்பின் முதல் நாளாகிய, சித்திரை மாதம் முதல் தேதி பஞ்சாங்கம் படிப்பதென்று, ஒரு கொள்கை அனாதிகாலமாய், சம்பிரதாயத்தில் இருந்து வருகின்றது. அதன்படி, ஒவ்வொரு வருஷமும் அதை கொண்டாடி வருகின்றோம். பழைய காலத்தில், மந்திரிகளை பற்றி ராஜநீக சாஸ்திரங்களில் வர்ணிக்கும்பொழுது, பின்வருபவற்றை முன்னறிந்து நடப்பவனே மந்திரியாவான், என்று கூறப்படுகிறது. ஜ்யோதிஷ சாஸ்திர ரீதியாக, பின் நடப்பவைகளை முன்னறிந்து கொள்வதற்காகவே, பஞ்சாங்கம்

கணிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாங்கம் கணிப்பதற்காக, அனாதிகாலமாக நம் தேசத்தில் உபயோகப்படுத்தப்பட்ட க்ரந்தங்களில், **வாக்யம்** என்பது ஒன்று. இது கர்காச்சார்யரால் செய்யப்பட்டது. வேதாங்கமானது. **சித்தாந்தம்** என்பது மற்றொன்று. வாக்யப்படி கணித்தது வாக்ய பஞ்சாங்கம். நம் தேசத்தில், இது ப்ரசுரமாயுள்ளது. சித்தாந்தப்படி கணிதம் கர்னாடகம், தெலுங்கு முதலிய தேசங்களில் ப்ரபலமாயுள்ளது. திருக்கணிதம் என்றால் என்ன? மேல்நாட்டார் கிரஹ நிலைகளை அறிய, தூரதிருஷ்டி கண்ணாடிகளை கண்டுபிடித்து, அதன் மூலமாக நவக்ரஹங்களுடைய நிலை, உதயம், அஸ்தமயம், முன்போக்கு, பின்போக்கு, மௌட்யம் முதலியவைகளை கண்டுபிடித்து புஸ்தகங்களை ஆங்கிலத்தில் அச்சிட்டிருக்கிறார்கள். ஹிந்தியிலும் அதை மொழிபெயர்த்து இருக்கிறார்கள். அதை உதவியாக கொண்டு திதி, நக்ஷத்திரம் இவைகளுடைய வ்ருத்தி ஹ்ராஸங்களைக் குறிப்பதேயாம். மேற்கண்ட குறிப்புகள் சுந்தரேச ஸ்ரௌதிகளால், முதலில் செய்யப்பட்டு, இன்றும் நம் நாட்டில் வழங்கப்பட்டு வருகின்றது.

பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கங்கள் என்று பொருள். அவை திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் இவைகளே. ராவணனுடைய தர்பாரில், பிரம்மதேவர் அன்றன்று, பஞ்சாங்கம் படித்து வந்தார் என்று, கதைகளில் கூறப்படுவதை கேட்டிருக்கின்றோம். ஸ்ரீரங்கம் முதலிய பெரிய கோவில்களில், ஸ்வாமி சன்னதியில், பிரதி தினமும் பஞ்சாங்கம் படிக்கப்படுகிறது. பஞ்சாங்கம் படிப்பதனால், என்ன பயன் என்று கேட்கலாம். இதற்கு பலன் அபிவிருத்தியும், நக்ஷத்திரத்தினால் பாபஹரணமும், யோகத்தினால் ரோக நிவாரணமும், கரணத்தினால் காரிய சித்தியும் ஏற்படுகின்றன என்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக பலனை கூறுமிடத்தில், கங்கா ஸ்நான பலன் இதை படிப்பதால் ஏற்படுகிறது என்று உரைக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றை தவிர நவக்ரஹ சாரங்களை பற்றியும், பஞ்சாங்கம் அறிவிக்கிறது. நவக்ரஹ சாரங்களின் மூலமே நமக்கு வரப்போகிற சுக, துக்கங்களை அறியலாம். நவக்ரஹங்களை ஆராதிப்பதின் பலன் சாஸ்திரம் பின்வருமாறு கூறுகிறது. சூரியன் ஆரோக்யத்தையும், சந்திரன் நிர்மலமான யசஸ்ஸையும், அங்காரகன் ஐஸ்வர்யத்தையும், புதன் ப்ரக்ஞையையும், குரு கௌரவத்தையும், சுக்ரன் அழகிய வாக்விலாஸத்தையும், சனி அதிக சந்தோஷத்தையும், ராகு புஜபலத்தையும் விரோதிகளின் சமனத்தையும், கேது குலத்தின் மேன்மையையும் செய்கிறார்கள்.

அவதார புருஷர்களான ராமர், கிருஷ்ணர், சங்கரர் முதலியவர்களின் ஜயந்தி தினங்களையும், ஆழ்வார்கள் நாயன்மார்களது திருநக்ஷத்திரங்களையும் அறிந்து, அந்நாட்களை மனமுருகி கொண்டாட, பஞ்சாங்கம், பரம உபகாரமாயிருக்கிறது. உபநயனம் விவாஹம் முதலிய சுபகர்மாக்களையும், சிராத்தாதிகளையும் நடத்துவதற்கு பஞ்சாங்கம் அடிப்படையானது.

சுமார் 2000வருஷங்களுக்கு முன் தோன்றிய, புத்தமத பிரபாவத்தினால், நாஸ்திகம் விருத்தியடைந்து, கர்மாக்களுக்கு பிரதான்யமே இல்லாது போன அக்காலத்தில், ஸநாதன ஹிந்து மதம் சீர்பட்டு ஓர் குடைக்கீழ் ஆள அவதரித்தருளிய ஆதிசங்கர பகவத் பாதர்களுடைய அனுக்ரஹத்தினால், மீண்டும் கர்மாக்கள் ஓங்கி, ஸநாதன மதம் தலைதூக்கி நின்று பரவத் தலைப்பட்டது. பஞ்சாங்கத்தின் ஆவஸ்யகமும் நன்கு உணரப்பட்டது.

அதிகார வர்க்கத்தினர் அரசாங்கத்தில் மாறி புதிதாக அமரும்போது, தனது நலனுக்காக, அறிவிலும் செல்வத்தாலும் சிறந்தோர் பரிச்சயம் செய்து கொள்வது போல, வருஷாரம்பத்தில் அதிகாரம் வகிக்கும் நவக்ரஹ தேவதைகளை, பஞ்சாங்கம் படிப்பது என்ற வியாஜத்தால், நாம் பரிச்சயப்படுத்தி கொண்டு, அவர்களது அருளுக்கு பாத்திரமாகிறோம் என்பதும், ஓர் விசேஷ சம்பவமாக கருதப்படுவதற்குரியதல்லவா?

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



**Gururam Consulting Private Ltd**

# *ப்ரும்மாவின் சிறைவாசம்*

ஸ்காந்த புராணத்தில், முருகப்பெருமான் ப்ரும்மதேவரிடம், ப்ரணவத்தின் பொருளை கேட்பதாகவும், அதற்கு ப்ரும்மா பதில் தராமல் போகவே, முருகன் அவரை சிறைப்பிடிப்பதாகவும் கதை வருகிறது.

ஏன் ப்ரும்மாவையே சிறைப்பிடிக்க வேண்டும். படைப்புக்கடவுளான ப்ரும்மதேவருக்கே இப்படி ஒரு கதியா என கேள்வி வருகிறது; முருகனோ தாரகாசுரனை அழிப்பதற்காக அவதாரம் எடுத்தவர்; தேவசேனாபதி. அவர் ஏன் ப்ரும்மாவை சிறையிலிடுகிறார்? இதில் ஒரு தத்துவம் உள்ளது. அது என்ன?

முருகன் எதற்கு அவதாரம் செய்கிறார்? தாரகாசுரன் கடுமையான தவம் புரிந்து, சிவபெருமானின் சக்தி ஒன்றினால் மட்டுமே தன்னை வெல்ல முடியும் என்று வரம் பெறுகிறான். தேவர்கள் அவன் கொடுமை தாங்காமல், மன்மதனை முன்னிட்டு, சிவனின் தவத்தை கலைக்கின்றனர். மன்மத தகனம் நடந்தாலும், முடிவில் பார்வதி திருமணம் நடக்கிறது. அதன் பின்னரே, ஸ்கந்தோற்பத்தி - முருகனின் அவதாரம் நடக்கிறது.

முருகன் தாரகாசுரனை அழிக்கிறார். தாரகனை அழிக்கையில், அவருக்கு ஒரு சிந்தனை வருகிறது. என்னவெனில், ஏன் இப்படி ஒரு கொடுமையான அசுரன் படைப்பில் வந்து, எல்லோருக்கும் துன்பம் தர வேண்டும்? ப்ரும்மா, ஆதி ஒலியான ப்ரணவத்தை தியானம் செய்பவர். அப்படி அவர் இருந்திருந்தால், இப்படி ஒரு அசுரன் அவர் படைப்பில் வந்திருக்க மாட்டானே என்பதுதான் முருகனின் ஐயம்.

ப்ரும்மதேவர் ப்ரணவ தியானத்தை மறந்ததாலேயே, இப்படி ராஜச, தாமச குணம் கொண்ட அசுரன் அவர் சிருஷ்டியில் பிறப்பெடுத்திருக்கிறான்; அவர் ப்ரணவத்தை மறந்து, சிருஷ்டி தொழிலை செய்ததாலேயே, அவரை முருகன் சிறைப்படுத்துகிறார்.

ஒருவர் தான் செய்யும் ஆன்மீக சாதனையை, தியானத்தை, நாமத்தை மறந்தாரெனில், அவர் மறுபடி உலக வாழ்க்கை எனும் பந்தத்துக்குள் மாட்டி கொண்டு பிறவிகள் எடுப்பார். அதுவே ப்ரும்மா சிறைப்படுவதாக சொல்லப்படுவது. ப்ரணவத்தை மறந்த ப்ரும்மாவின் படைப்பில் தாரகாசுரன் வருவதுபோல், ஒருவர் ஆன்மீகத்தில் முன்னேறாமல் இருந்தால் அவருக்கு பிறக்கும் குழந்தைகளும் சரியாக இருக்க மாட்டார்கள் என்பதும் கவனிக்க வேண்டிய விஷயம்.

**<u>TO - ALL SUBSCRIBERS</u>**

**All subscribers are requested to furnish their mobile no by Email, SMS or Phone along with subscription no: for updation of Records.**

**Email : helpdesk@madhuramurali.org**
**Phone : "24895875" SMS : 9790707830**


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

## *திருநாங்கூர் திருக்காவளம்பாடி திவ்யதேச மஹாசம்ப்ரோக்ஷணம்*

திருமங்கையாழ்வாருக்கே ப்ரத்யேகமானவை என்று சொல்லத்தக்க திருநாங்கூர் திவ்யதேசங்கள், காலதேச வர்த்தமானங்களால், மிகவும் சிதிலமடைந்து, இருந்த நிலையை கண்டு நம் குருநாதர் துயருற்று, இத்திவ்யதேசங்களுக்கு நித்யாராதனைகள் முதல், திருப்பணி கைங்கர்யங்கள் வரை செய்ய வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார்கள். இப்பிரேரணைப்படியே,

| | |
|---|---|
| **6.7.1998** | அரிமேய விண்ணகரம் - ஸ்ரீகுடமாடும் கூத்தர் |
| **9.4.2000** | திருத்தெற்றியம்பலம் |
| **15.11.2000** | திருச்செம்பொன்செய்கோவில் |
| **30.11.2000** | காவளம்பாடி ராஜகோபாலஸ்வாமி |
| **24.8.2001** | திருமணிக்கூடம் வரதராஜபெருமாள் |
| **26.11.2001** | பார்த்தன்பள்ளி கோலவில்லிராமர் சன்னதி |
| **8.9.2003** | திருத்தேவனார்தொகை ஸ்ரீமாதவபெருமாள் |
| **16.3.2005** | திருவாலி ஸ்ரீலக்ஷ்மிநரசிம்ம பெருமாள் கோவில் |
| **11.9.2008** | ஸ்ரீவண்புருஷோத்தமன் கோவில் |
| **12.4.2012** | ஸ்ரீகுடமாடும் கூத்தர் கோவில்(2வது முறை) |
| **9.11.2014** | ஸ்ரீவைகுந்த விண்ணகரம் |

முதலான சன்னதிகள் முழுவதுமாக திருப்பணி கைங்கர்யம் பூர்த்தி செய்யப்பட்டு, மஹாசம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. மேலும், திருநாங்கூர் ஸ்ரீநாராயண பெருமாள் கோவில் முதலான மற்ற திருநாங்கூர் திவ்யதேசங்கள் மற்றும் அபிமான ஸ்தலங்களின் கைங்கர்யங்களும், உபகார கைங்கர்யங்களும் செய்யப்பட்டு பொலிவடைந்துள்ளன. 1998இல், திருநாங்கூர் திவ்யதேச நித்ய ஆராதனை கைங்கர்யங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுள்ளத்தை அறிந்து, அப்பணிகளில், முதன்முதலாக ஈடுபடுத்தி கொண்டவர் பரம வைஷ்ணவரான பௌண்டரீகபுரம் ஸ்ரீ உ.வே.T.தேவநாதன் ஸ்வாமின் Eyetex மற்றும் அவர்தம் குடும்பத்தினர் ஆவர். நமது காவளம்பாடி கண்ணனுக்கு இந்த நித்ய ஆராதனை கைங்கர்யம் ஆரம்பித்த மாதம் முதல், இன்று வரை மிகவும் முகமலர்ச்சியுடன், சிரத்தா பக்தியுடன், இப்பணியில் தன்னை

ஈடுபடுத்தி கொண்டு வருகின்றார். தற்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி ப்ரேரணையால், திருநாங்கூரில் நடைபெற்று வரும் இரண்டாம் கட்ட திருப்பணிகளை அறிந்து, நான் இதுகாலம் நித்யாராதனை கைங்கர்யமாக நடத்தி வந்த, காவளம்பாடி ஸ்ரீராஜகோபாலஸ்வாமியின் திருப்பணி கைங்கர்யத்தின் பாக்யத்தை, தனக்கு அவசியம் அனுக்கிரஹிக்க வேண்டும் என பிரார்த்தனை செய்ய, அத்திருப்பணி திரு.உ.வே.T.தேவநாதன் அவர்களால் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது.

நாளது பங்குனி 29ஆம் தேதி 11.4.2016 அன்று, காலை 10மணிக்கு மேல் 10.30மணிக்குள் காவளம்பாடி ராஜகோபாலஸ்வாமி கோவில் சம்ப்ரோக்ஷணம் நடைபெற உள்ளது. இத்திருப்பணியில், ஒரு அங்கமாக 'பூவளம்பொழில்கள் சூழ்ந்த புரந்தரன் செய்த நாங்கை' என்று இந்திரன் (புரந்திரன்) நந்தவனம் கைங்கர்யம் செய்த காவளம்பாடியில், திருவாலி - திருநகரி மற்றும் திருநாங்கூர் 11திவ்யதேசங்களை பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்யும் வைபவத்தில் இடம்பெற்றுள்ள மரம், செடி, கொடிகள், விருக்ஷங்களால் மட்டுமே இந்த நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது.


**FORM IV**

Statement about ownership and other particulars about newspaper MADHURAMURALI
(to be published in the first issue every year after the last day of February)

1. Place of publication: - 2/24, Nethaji Nagar, Jafferkhanpet, chennai 600083. Tamilnadu
2. Periodicity of its publication: - monthly
3. Printer's Name : - M/s. Rajthilak Printers (P) Ltd., Sivakasi. Nationality : Indian
4. Publisher's Name : - S.Srinivasan Nationality : Indian
5. Editor's Name : - S.Sridhar Nationality : Indian

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital :
**Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83**

I, S.Srinivasan, Publisher hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief. sd/- S.Srinivasan
Date:31/03/2016 Signature of Publisher

# வீடு தேடி வருவான் விட்டலன் -26

## தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

### ஸ்ரீஞானேஸ்வரர்-15 (பிரதிஷ்டானபுரம்)

சிறுவன் ஞானேஸ்வர், பண்டிதர் அருகே வந்தான்.

பண்டிதர் : அங்கே தெரிகிறதே, இரு எருமை மாடுகள், அவை உனக்கு எப்படி தோன்றுகிறது.

ஞானேஸ்வர் : எருமை மாடு என்று பார்த்தால், எருமை மாடு. பரப்ரும்மமான ஹரி என்றால் ஹரி.

பண்டிதர் : இந்த எக்குத்தப்பு பேச்சு வேண்டாம். உனக்கு எப்படி தோன்றுகிறதோ, அதை அப்படியே சொல்.

ஞானேஸ்வர் : மனதில் வேறுபாடுகள் இருக்கும் வரை சாந்தி என்பது வரவே வராது. எனக்கு வேறுபாடுகள் இல்லை. எறும்பு என்றோ, மனிதன் என்றோ, நான் பார்ப்பதில்லை. ஒருவன் குள்ளமானவன், உயரமானவன், ரோகி, கறுப்பு, வெள்ளை என்றும் நான் பார்ப்பதில்லை. எங்கும் எதிலும் வியாபித்து இருப்பவன் ஹரி மட்டுமே. அந்த ஹரி மட்டும்தான் இருக்கிறான். அவனே மனிதர்களிடத்திலும், பிராணிகளிடத்திலும் விருக்ஷங்களிடத்திலும் இயங்குகிறான். எனக்கு நீங்கள் எருமை என்று எதை காண்பிக்கிறீர்களோ, அது எனக்கு பாண்டுரங்கனான ஹரியாகத்தான் தெரிகிறது.

பண்டிதர்: ரொம்ப பலமாக பேசுகிறாய். எருமை மாடும், பாண்டுரங்கனும் ஒன்றா? பாண்டுரங்கன் வேத ப்ரியன். வேத ஸ்வரூபி. இந்த எருமை மாடு வேதம் சொல்லுமா?

ஞானேஸ்வர், பண்டிதர் சொன்னவுடன் கோபித்துக் கொள்ளவில்லை. ஆவேசம் கொள்ளவில்லை. பண்டிதர்கள் நிறைந்த சபையில் அந்த கோதாவரிக்கரையில், ஒரு எருமை மாட்டின் மேல் கையை வைத்தார். ‘எருமை மாடே வேதம் சொல்’ என்று அவர் சொல்லவில்லை. அப்படி அவர் சொல்லி இருந்தால், இந்த சரித்திரத்தில் விசேஷம் இருக்காது. அவர் எருமை மாட்டை தொட்டு, பாண்டுரங்கா! வேதம் சொல் என்று சொன்னார்.

அடுத்த கணம் ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. சாக்கடையிலும், சேற்றிலும் புழங்கி மகிழ்ந்திடும் தமோ குண

பிரகிருதியான எருமை மாடு, இதானிம் விஷ்ணும் என்று சாம கானத்தை ஸ்வர சுத்தமாக சொல்ல ஆரம்பித்தது. பண்டிதர்கள் ஆடிப் போய்விட்டனர்.

எந்த பண்டிதர் ஞானேஸ்வரரிடம் கேள்வி கேட்டாரோ, அவர் தன்னையும் எருமை மாட்டையும் ஞானேஸ்வரரையும் தன் புதல்வனையும் பார்த்தார். அவர் புதல்வனுக்குக் கூட அவ்வளவு அழகாக சொல்லத் தெரியாது. அவருக்கு, தனக்கும் எருமை மாட்டுக்கும் என்ன வித்யாசம் என்று யோசித்தார். அவருக்கு, கொஞ்சம் அவமானமாக இருந்தது. ஞானேஸ்வரரை பார்த்து, "அந்த எருமை மாட்டை கொஞ்சம் நிறுத்த சொல். நான் சொல்லும் வேதத்தை ஒரு எருமை மாடு சொல்வது எனக்கு அவமானம். நிறுத்த சொல்" என்றார். ஞானேஸ்வரர் மறுபடி எருமை மாட்டின் மேல் கை வைக்க, அது வேதம் சொல்வதை நிறுத்தியது.

அதற்கு மேல், அங்கு ஒரு பண்டிதருக்காவது ஞானேஸ்வரரின் மகிமை குறித்து சந்தேகம் உண்டாகவில்லை. சாஸ்திரமும் வேதமும் கற்பதே ஞானம் அடைவதற்குத்தான். அது உங்களிடம் பூரணமாக இருப்பதால், உங்களுக்கு எந்த கல்வியும் அவசியம் இல்லை. நீங்கள் சுத்த ஆத்மாக்கள் என்று ஸுத்தி பத்ரம் எழுதி கொடுத்தார்கள். இந்த பத்ரம் இன்றும் ஆலந்தியில் ஞானேஸ்வரர் வாழ்ந்த வீட்டில், பாதுகாக்கப்பட்டு இருக்கிறது.

(தொடரும்)

*ஒருவர் மற்றொருவரை பார்த்து, அவர் மிகுந்த கர்வி என்பார். அவர் அப்படி சொல்வது உண்மையாகவும் இருக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால், அவரை, மாயை கர்வத்தால் பிடித்து வைத்து கொண்டிருக்கிறது. மேலும்,* **'அவர் ஒரு கர்வி'** *என சொல்லும் இந்த நபரையோ,* **'நான் ஒரு வினயன்'** *என்ற நினைப்பை கொண்டே மாயை பிடித்து வைத்து கொண்டிருக்கிறது. இருவரும் மாயையின் வலைக்கு உட்பட்டவர்களே!*

*– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*

## சனாதனப்புதிர் பகுதி 84 -- விடைகள் -ஆத்ரேயன்

1. வேளாளர் குலம், புரட்டாசி மாதம், அவிட்டம், கும்பராசி.
2. சதுரகிரி ஸ்தல புராணம் - சாணாங்கி முனிவர், தனது சீடர்களான நாகார்ஜுனாதி முனிவர்களுக்கு கூறுகிறார்.
3. அந்தணர் குலம், வைகாசி - விசாகம் - விருச்சிக ராசி.
4. தேவேந்திரனின் சாபத்தால்.
5. வைத்தீஸ்வரன் கோவிலில்.
6. கும்பகோணத்தில் கும்பேஸ்வரர் சன்னதியில்.
7. மன்னர் காய்ச்சின வழுதி.
8. கலி பிறந்து 23வது ஆண்டில்; ஜமதக்னி முனிவர் இருந்தார்.
9. அந்தணர் குலத்தில்; ஆயில்ய நக்ஷத்திரம்; மார்கழி மாதம்; கடக ராசி.
10. கார்த்திகை மாதம்; மிருகசீர்ஷம்; மிதுன ராசி; மருதமலையில் சமாதி அடைந்தார்.

## சனாதனப்புதிர் பகுதி 84 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. திருமூலர் எந்த குலத்தில், எந்த மாதம் நக்ஷத்திரம் ராசியில் பிறந்தார்?
2. திருமூலரை பற்றி மற்றொரு விருத்தாந்தம் எங்கு காணப்படுகிறது?
3. நந்திதேவர் எந்த குலம், எந்த மாதம் எந்த ராசியில் பிறந்தார்?
4. நந்திதேவர், யாருடைய சாபத்தினால், மனிதனாக பிறக்கிறார்?
5. தன்வந்திரி, எந்த கோவிலில் சமாதி நிலை கொண்டுள்ளார்?
6. அகத்தியர் எங்கே யாருடைய சன்னதியில், சமாதி நிலையை அடைந்தார்?
7. எந்த மன்னர் பாண்டிய நாட்டில், முருகனின் ஆணைப்படி அகத்தியரை முத்தமிழ் சங்கத்தின் தலைவராக்குகிறார்?
8. சங்கத்தமிழ் வளர்த்த தமிழ்சங்க கூட்டம், இமயமலையில் எப்பொழுது நடந்தது? அதில் எந்த முனிவர் இருந்தார்?
9. அகத்தியர் எந்த குலம், எந்த மாதம், ராசியில் பிறந்தார்?
10. பாம்பாட்டி சித்தர், எந்த மாதம் நக்ஷத்திரம் ராசியில் பிறந்தார்? எங்கே சித்தியானார்?

# பாலகர்களுக்கு ஒரு கதை



## என்பும் உரியர் பிறர்க்கு!

மீனாக்ஷி அம்மாள் என்ற ஒரு மூதாட்டி தள்ளாத வயதிலும் அருமையான பழங்களை விற்பனை செய்து கொண்டிருந்தாள். அதன் வருமானத்தினால் மட்டுமே அவள் வாழ்க்கை நடத்தி வந்தாள். அவள் எப்பொழுதுமே சுத்தமான அழுகல் இல்லாத பழங்களையே விற்பனை செய்வாள். கண்ணும் கருத்துமாக தரமான பழங்களையே அவள் விற்பனை செய்வதால், அவளிடம் பலர் வந்து வாங்குவர்.

பாலு என்ற ஒரு இளைஞன் எப்பொழுதும் மாலை நேரங்களில் அவளிடம் வந்து பழங்களை வாங்குவான். ஆப்பிள், ஆரஞ்சு, கொய்யா, திராக்ஷை என எது வாங்கினாலும் அதில் ஒரு சிறிதை அந்த மூதாட்டியின் கடையிலேயே கொஞ்சம் சுவைத்து பார்ப்பான். கொஞ்சம் சாப்பிட்டு பார்த்து விட்டு, 'அடடா, இது புளிக்கிறது. இதில் சுவையே இல்லை. இது வறண்டு இருக்கிறது' என்றெல்லாம் சொல்வான்.

அவன் அப்படி சொல்லும்பொழுதெல்லாம் அந்த மூதாட்டி தன்னிடம் உள்ள அதே பழக்கொத்தில் ஒன்றை விண்டு சாப்பிட்டு பார்ப்பாள். உடனே, 'இப்பழத்தில் என்ன குறை? அருமையான சுவை. வாடாத பழம். இனிக்கிறது. பலம் தரும். உனக்கு எப்படி புளிக்கிறது' என்பாள். என்றாலும் எடையை விட கூடவே ஒரு நூறு கிராம் கொடுப்பாள்.

இது அன்றாட வாடிக்கையாக இருந்தது. தினம் இப்படி அந்த இளைஞன் சொல்வதும், மூதாட்டி பதில் உரைப்பதுமாகவே இருந்தது. பார்ப்பவருக்கு அது விநோதமாக ஆக இருக்கும். ஆனாலும் கொஞ்சமும் சலிக்காமல் மூதாட்டி விற்பனை செய்வாள். அந்த இளைஞனும் ஒன்றும் நடவாதது போல அவள் கடைக்கு மட்டுமே வந்து வாங்குவான்.

இதை தினம் பார்த்து கொண்டிருந்த அந்த மூதாட்டியின்

கடை அருகே இருந்த மற்றொரு கடைக்காரன் அவளிடம், 'ஏ! பாட்டி! அந்த பையன் தினம் உன் கையில் பழம் வாங்கி சரி இல்லை என்கிறான். ஆனால் நீ என்ன என்றால் அவனை ஒன்றும் பெரிதும் சொல்ல மாட்டேன் என்கிறாய். மாறாக அவனுக்கு எடையை விட கூடுதலான பழங்களை தருவதை நான் மட்டும்தான் கவனித்து வருகிறேனோ! இது புரியவில்லையே' என்றான்.

மூதாட்டி சொன்னாள், 'அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் கொஞ்சம் சாப்பிட்டு பலன் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி சொல்கிறான் என்று எனக்கா தெரியாது. ஆனால் அவன் அன்பினால் சொல்கிறான். அந்த அன்புதான் எடையை கூட்டுகிறது. வேறு ஒன்றும் இல்லை' என்றாள். அவள் பேசுகையில் கண்கள் பளீரென ஒளி வீசினாற் போலிருந்தது. அந்த பக்கத்து கடைக்காரன் மூக்கில் விரலை வைத்து கொண்டான். அவனுக்கும் அது புது அனுபவமாய் இருந்தது.

அதேநாள் அந்த இளைஞனின் மகள் சிறுமி அப்பாவிடமே கேட்டாள். பழங்கள் இனிப்பாக இருக்கின்றனவே? ஏன் தினமும் அந்த பாட்டியிடம் பழம் நன்றாகவே இல்லை என ஏன் சொல்கிறீர்கள் என கேட்டாள். அப்பொழுது அவன் சிரித்து கொண்டே சொன்னான், 'மகளே! விஷயம் அதுவல்ல; பழம் நன்றாகத்தான் இருக்கிறது. நான் இப்படி சொன்னால் கொஞ்சம் அவள் சுவைத்து பார்ப்பாள். உன் பாட்டி மாதிரிதானே அவள் இருக்கிறாள். நல்ல பழங்களை அவளும் சாப்பிட வேண்டும் அல்லவா' என்றான். அப்படி சொல்லிக்கொண்டே அவன் தன் மனதில், அன்பில் அன்றோ, தியாகமும் ஆனந்தமும் இருக்கின்றது! அன்பை உண்மையில் தன் செயல்களில்தானே உண்மையாக காட்ட முடியும்! இந்த அன்பு எவ்வளவு பேருக்கு ஆனந்தத்தை கொடுக்கிறது! என்று நினைத்து கொண்டிருந்தான்.

அப்படி அவன் நினைக்க நினைக்கவே அவன் மகள் ஓடி வந்து அவனை கட்டி கொண்டாள். அது அவன் நினைப்பதை ஆமோதிப்பதாக இருந்தது.

**மார்ச் 7** - மஹாசிவராத்திரி - மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் பிரதிஷ்டாதினத்தை முன்னிட்டு கன்யாகுமரி ஜய ஹனுமானுக்கு விசேஷ திருமஞ்சனம் செய்து வடைமாலை சாற்றப்பட்டது. இரவு வேதபாராயண கோஷமுடன் பூஜை செய்து ஸ்ரீஸ்வாமிஜி தம் திருக்கரங்களால் பிரசாதம் அருளினார்கள். முன்னதாக காலையில் விட்டலாபுரம் பாண்டுரங்கனுக்கு நாமகீர்த்தனத்துடன் சிறப்பு அபிஷேகமும் ஆராதனையும் அன்பர்களால் செய்யப்பட்டது.

**மார்ச் 22** - மதுரபுரி ஆஸ்ரமத்தில் சைதன்ய மஹாப்ரபுவின் ஜெயந்தி தினமான ஹோலி உற்சவம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**அமெரிக்கா சத்சங்கங்கள்** மார்ச் 12-20 - ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசியுடன் சத்சங்களுக்காக அமெரிக்கா சென்றுள்ள பூர்ணிமாஜி ஹூஸ்டன் நாமத்வாரில் முதலில் ஸ்ரீமத் ராமாயண நவாஹ உபன்யாசம் மிக சிறப்பாக நிகழ்த்தினார். மிகவும் திரளான அன்பர்கள் வந்திருந்து சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**மார்ச் 6** மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் அருகிலுள்ள கிராம மாணவ மாணவியருக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நடைபெற்றது. பம்மல் ஸ்ரீபாலாஜி மற்றும் முரளிஜி கலந்து கொண்ட சுமார் 300 மாணவர்களை ஊக்குவித்து பேசினர்.

**பிப்ரவரி 14 - 21** மற்றும் தூத்துக்குடி நாமத்வார் மற்றும் சிவகாசி அருகே துரைசாமிபுரத்தில் பம்மல் ஸ்ரீபாலாஜி க்ருஷ்ண ஜனனம், கோவிந்த பட்டாபிஷேக, ராதாகல்யாண வைபவ சத்சங்கங்களை நிகழ்த்தினார். தூத்துக்குடி நாமத்வாரில் ராதாகல்யாணமும் சிவகாசியில் புறப்பாடும் இடம் பெற்றிருந்தது. தூத்துக்குடி நாமத்வாரில் மாணவர்களுக்கான ஒரு மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனையும் நிகழ்த்தினார்.

**பிப்ரவரி, மார்ச்** மாதங்களில் முறையே அண்ணாநகர் நாமத்வார் மற்றும் பெரியகுளத்தில் முரளிஜி சுந்தர காண்டம் மற்றும் ஸ்ரீமத்ராமாயண உபன்யாசம் விரிவாக நிகழ்த்தினார். சென்னையில் பல பள்ளிகளில் கூட்டு பிரார்த்தனையும் நிகழ்த்தினார்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீ ஹரி பாபாஜி - 3

இந்த பஜனை உத்ஸவம் கங்கை வெள்ளம் நின்றது முதல், வருடாவருடம் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது. கங்கையின் வெள்ளப் பெருக்கு என்னவோ அணையினால் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனால் இப்போது, பக்தர்களின் வெள்ளத்தில் இந்த க்ராமங்கள் மூழ்கலாயின. பாபாவின் ஸங்கல்பமே கங்கையின் வெள்ளத்திலிருந்து இந்த மக்களை காப்பதைக் காட்டிலும், பக்தி கங்கையின் வெள்ளத்தில் இவர்களை மூழ்கடிப்பது தானே என்று தோன்றும் அளவிற்கு அங்கு பக்தர்கள் கூடலானார்கள்.

இச்சம்பவத்திற்குப் பின் இங்குள்ள மக்களுக்கு ஹரிநாமத்தின் மீது அசைக்க முடியாத சிரத்தையும் பக்தியும் வளர்ந்துவிட்டது. நாமத்தின் மீது மட்டுமல்லாமல் பாபாவின் மீதும் மக்களுக்கு பெருமதிப்பு ஏற்பட்டது. அவரை மக்கள் பகவானாகவே எண்ணினார்கள். முதலில் அவரை விமர்சனம் செய்த சிலரும் கூட இப்பொழுது பாபாவின் பக்தர்களாகிவிட்டார்கள்.

பாபா 1884ஆம் ஆண்டு பங்குனி மாத சுக்ல சதுர்தசியில் பஞ்சாபில் ஹோஷியார்புர் ஜில்லாவிலுள்ள மேங்கர்வால் எனும் க்ராமத்தில் ஒரு சீக்கிய குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை ப்ரதாப் சிங். ஐந்து பிள்ளைகளில் இளையவரான பாபாவின் பெயர் தீவான் சிங் என்பதாகும். தீவான்சிங் மிகவும் புத்தி கூர்மையுடையவராக திகழ்ந்தார். ஹோஷியார்புரிலுள்ள ஹைஸ்கூலில் படித்து, பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பின் அவர் லாகூர் சென்றார். அங்கு இண்டர்மீடியட் முடித்த பின், லாகூர் மருத்துவ கல்லூரியில் சேர்ந்தார்.

சிறு ப்ராயத்திலேயே ஆனந்தபூரைச் சேர்ந்த மஹானான ஸந்த் ஸ்ரீஸச்சிதானந்த கிரி என்பவர், தீவானிடம் ஒரு மஹாபுருஷனின் லக்ஷணங்கள் இருப்பதைக் கண்டு, அவருக்கு குருவாக இருந்து அனுக்ரஹம் செய்தார். லாகூர் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் காலத்தில், ஸமயம் கிடைக்கும்

போதெல்லாம், இவருக்கு சென்று சேவை புரிவார். இவருடைய ஸங்கத்தினால் தீவானின் வைராக்யம் தீவிரமானது.

மருத்துவப்படிப்பு முடிவுற ஒரே வருடகாலம் இருந்த ஸமயத்தில், தீவான் சிங் கல்லூரியை விட்டுவிட்டு, துறவறம் ஏற்க முடிவு செய்து, தனது குருவை அணுகினார். அப்பொழுது குருநாதர், 'இப்பொழுது இல்லை. ஸந்யாஸம் என்றால் உலக வாழ்க்கைக்கு ஒரு பெரும் முற்றுப்புள்ளி ஆகும். உடையின் நிறத்தை மாற்றிக் கொள்வது மட்டும் ஸந்யாஸம் ஆகி விடாது. உலகம் நம்மை முற்றிலுமாக விடும்போது, ஸந்யாஸம் தானாக ஸித்திக்கும்' என்று அவரிடம் கூறிவிட்டார்.

தீவான் சிங் சில காலம் வரையில், குருநாதரின் ஆஸ்ரமத்தில் தங்கி ஸேவை செய்து வந்தார். வைராக்யம் எனும் அக்னி, அவரிடம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. ஒரு நிலையில் அது மிகவும் தீவிரமாகியது. அதனால் அவர், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் காசி சென்றுவிட்டார். காசியில் தன்னிடமிருந்த சில ஸாமான்களை ஏழை எளியோரிடம் கொடுத்துவிட்டு, ஸந்யாஸம் ஏற்றுக்கொண்டார். அதன்பின் ஷூலடங்கேஷ்வர் என்ற கங்கை கரையிலிருந்த ஒரு நிர்ஜனமான இடத்தில் இருந்துகொண்டு, ப்ரம்ம சிந்தனம் செய்யலானார். சில நாட்களுக்கு பின் ப்ரயாகை சென்றுவிட்டார். அங்கு த்ரௌபதிகாட் எனுமிடத்தில், ஒரு குகையில் வஸித்துக் கொண்டு, தவம் செய்யலானார். அச்சமயங்களில் அவர் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே மதுகரிக்கு செல்வார். கிடைக்கும் ரொட்டிகளை ஒரு துணியில் சுற்றி, மண்ணில் புதைத்து வைத்துவிடுவார். தினமும் அதிலிருந்து சில துண்டங்களை எடுத்து, தண்ணீரில் ஊற வைத்து பின் உண்பார். இதுவே அவருக்கு ஒரு நாளைக்கான ஆகாரம்.

மூன்று வருடம் கங்கை கரையிலிருந்து பின் அங்கிருந்து கிளம்பிவிட்டார். நடந்து, அங்குமிங்கும் திரிந்து, கடைசியில் ஹோஷியார்புர் திரும்பினார். மிகவும் ஸங்கோஜத்துடன் இரவில் குருதேவரை பார்க்கச் சென்றார். அவரை ஸந்யாஸ கோலத்தில் கண்ட குருநாதர், ஸந்தோஷப்பட்டார். (தொடரும்)

# *மாலே மணிவண்ணா – 146*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*மணிமருள் தகைவகை* -நீலமணியென்று கண்டார் மருளத்தக்க அழகின் தகையுடைய (கூந்தல்) *நெறி செறி* - சுருண்டு செறிந்த, *ஒலிபொலி* - தழைத்து பெருகிய, அவிர்நிமிர்விளங்கி நீண்ட, புகழ் கூந்தல் - எல்லாரானும் புகழப்படும் கூந்தலை உடைய வாணுதலோர் என இயையும்.

பினி நெகிழ் துணையினை (துளையினை என்றுளது) கட்டு நெகிழ்ந்த, இரண்டாக இணைக்க பெற்ற, தெளி ஒளி திகழ் ஞெகிழ் - தெளிந்த ஒளி திகழுகின்ற மலர் வளையை உடைய வானுதலோர்; தெரியரி மது மகிழ்பு அரி மலர் உண் கண் - ஆராய்ந்து அரித்துச் செய்ய பெற்ற மதுவினால் மகிழ்ந்து செருக்கிய கருவரி, செவ்வரி பரந்த மலர் போன்ற மகிழ்ச்சியுடைய மையுண்ட கண்களை உடைய வானுதலோர்.


மணி மயில் தொழில் எழில் இகல் மலி திகழ் - அழகிய மயில் போன்ற தொழிலை உடைய அழகான மனச்செருக்கு மிகுந்து திகழ்கின்ற, (அண்ணலவர்) மயிலை போன்ற பெருமித நடை உடைய ஆயிர் பிறிது இகழ் கடும் கடாக்களிற்று அண்ணலவரோடு - பிறவற்றை இகழுகின்ற கடுமையான மத யானையை ஒத்த தலைமைச் சிறப்புடைய ஆடவர்களோடு, வானுதலோர் அண்ணலவராகிய ஆடவரோடு அழகுமிகு வந்து வணங்க, எனவே ஆணும் பெண்ணுமாக இணைந்து வந்து வணங்குகிறார்கள் என்றார்.

'குளவாய் அமர்ந்தான் நகர்' - இத்தகு கீர்த்தி உடையதாக உள்ளது என்றார். இனி அத்திருக்கோயிலில் கோலங்கொண்டு எழுந்தருளியுள்ள ஆதிசேடனது சிறப்பை கூறுகிறார்.

திகழ் ஒளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்
**65** திகழ்பெழ வாங்கித் தம் சீர்சிரத்து ஏற்றி
மகர மறிகடல் ஐத்து நிறுத்துப்
புகழ்கால் சிறப்பின் இருத்திறத்தோர்க்கும்

அமுது கடைய இருவயின் அரணாகி
மிகாஅ இருவடம் ஆழியான் வாங்க
உகாஅ வலியின் ஒருதோழம் காலம்
அறாஅது அணிந்தாரும் தாம்;

இதுவரை உள்ள பகுதி, பாற்கடல் கடைந்த நிகழ்ச்சி பற்றி கூறுகிறது. திகழும் ஒளி உடைய கடலை கடைந்தபொழுது, மந்தர மலையை விளங்க வாங்கி, தன்னுடைய அழகிய சிரத்தின் கண் ஏற்றி, மகர மீன் விளங்கும் அலை வீசுகின்ற கடலின்கண் வைத்து நிற்கச் செய்து, புகழமைந்த சிறப்பினை உடைய தேவர், அவுணர் என்னும் இருவகையினர்க்கும் அமுதம் கடைய வேண்டி, இரண்டு பக்கத்திலும் பாதுகாப்பாக இருந்து, மிகுந்த இரண்டு வடத்தை (தலை, வால் என்ற இருபக்கத்தை) சக்கரப்படை உடைய திருமால் இழுக்க, சிந்தாத வலியுடன் ஒரு தோழம் காலம் நீங்காமல் சுமந்து அணிந்து நின்றவரும் ஆதிசேடர்தாம். (தொடரும்)



"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி**: Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | ஏப்ரல் 3, 17 மே 3, 17<br>April 3, 17 May 3, 17 |
| ஏப்ரல் 14 | கன்யாகுமரி ஜய ஹனுமான் சன்னதி லக்ஷ தீபம் |
| ஏப்ரல் 23,24,25 | திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**